**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

**முன்னிலை** : திரு மா. சந்திரமோகன், B.A.,B.L.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி

2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 23– ம் நாள் திங்கள்கிழமை

**அசல் வழக்கு எண்.239/2019**

CNR.No.TNMY07-000353-2019

சீர்காழி தாலுக்கா மற்றும் முன்சீபி, ஆச்சாள்புரம் கிராமம், 4/1 சண்முகர் வீதியில் வசிக்கும் கோவிந்தராஜன் மனைவி புஷ்பா. ..... வாதி

....எதிர்....

1. சீர்காழி தாலுக்கா மற்றும் முன்சீபி, நல்லநாயகபுரம் அஞ்சல், மயிலக்கோயில், நம்பர் 1 ராம் நகரில் வசிக்கும் வெங்கடாசலம் குமாரர் 62 வயதுள்ள ஞானசேகரன் (இறந்தார்)
2. சீர்காழி தாலுக்கா மற்றும் முன்சீபி, நல்லநாயகபுரம் அஞ்சல், மயிலக்கோயில், நம்பர் 1 ராம் நகரில் வசிக்கும் ஞானசேகரன் மனைவி 58 வயதுள்ள மலர்க்கொடி.

..... பிரதிவாதிகள்

இவ்வழக்கானது, வழக்கு 'சி' ஷெடியூல் சொத்தை வாதி அமைதியான முறையில் அனுபவிப்பதை எதிர்வாதியோ, அவரை சார்ந்தவர்களோ அல்லது முகவர்களோ எவ்வித தடையும், இடையூறும் செய்யாமலிருக்க எதிர்வாதிகள் மீது ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க கோரியும், வழக்கு செலவுத்தொகை கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| இவ்வழக்கு தாக்கலான நாள் | 17.12.2019 |
| இவ்வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | 17.12.2019 |
| இவ்வழக்கின் வழக்கு மூலம் ஏற்பட்ட நாள் மற்றும் இடம் | 06.10.2019 ம் தேதியில் சீர்காழி தாலுக்கா, ஆச்சாள்புரம் கிராமத்தில் உற்பத்தி. |
| இவ்வழக்கின் பொருமானம் மற்றும் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் | இவ்வழக்கானது, வழக்கு 'சி' ஷெடியூல் சொத்தை வாதி அமைதியான முறையில் அனுபவிப்பதை எதிர்வாதியோ, அவரை சார்ந்தவர்களோ அல்லது முகவர்களோ எவ்வித தடையும், இடையூறும் செய்யாமலிருக்க எதிர்வாதிகள் மீது ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் பெற வாதியின் சொந்த பொருமானம் ரூ.1,000/– என நிர்ணயம் செய்யப்பட்டு நீதிமன்ற கட்டணம் ரூ.30/– நீ.ம.க.ச. பிரிவு 27(C) ன் படி செலுத்தப்பட்டுள்ளது. |

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக இன்று 23.03.2026 இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.சுந்தரய்யா

அவர்களும் 1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. ஆர்.கார்த்திக்ராஜன் அவர்கள் ஆஜராகியும், வாதிகள் தரப்பில் வழக்கை மேல் நடத்த தயாராக இல்லை என்று மனு செய்து, அம்மனு பதிவு செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டதை அனுசரித்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**தீர்ப்பாணை**

1. வாதியின் வழக்கறிஞர், மேற்படி வழக்கை வாதி தொடர்ந்து நடத்த விருப்பமில்லாததால் வழக்கை Not press செய்து கொள்வதாக மனு செய்து, அம்மனு பதிவு செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டதை அனுசரித்து இவ்வழக்கு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

2. செலவுத் தொகை இல்லை.

**சொத்து விபரம்**

சீர்காழி தாலுக்கா, ஆச்சாள்புரம் கிராமத்தில்

**ஏ ஷெடியூல்**

புல எண் 315/1 ல் நஞ்சை ஏர் 2-33 சென்ட் பூரா.

**பி ஷெடியூல்**

புல எண். 315/1 ல் நஞ்சை திட்ட பரப்பு 0-94-0 ஏர்ஸில் 252-04 சதுரமீட்டருக்கு சமமான 2713 சதுரடி மனை எண்.10 மனையளவு கீழ் மேல் அடி வடபுறம் 71 அடி, தென்புறம் 9 அடி, தென்வடல் அடி மேல்புறம் 37 அடி, கீழ்புறம் 30 அடி.

நான்கெல்லை

கிழக்கில் - நகர் ரோடு
மேற்கில் - வாதியின் இதர நஞ்சை
வடக்கில் - மனை எண் 11
தெற்கில் - நகர் ரோடு, மற்றும் மனை எண். 37.

**சி ஷெடியூல்**

புல எண். 315/1 ல் நஞ்சை கிழக்கு மேற்கில் 3 அடியும் தெற்கு வடக்கில் 37 அடியும் உள்ள 111 சதுரடி மனை.

நான்கெல்லை

வாதியின் மீத மனைக்கு தெற்கு மற்றும் வடக்கு, கண்ணிக்கு கிழக்கு, எதிர்வாதி மனைக்கு (மனை எண் 10 ) மேற்கு.

2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 23–ம் நாள் என் கையொப்பம் இந்நீதிமன்ற முத்திரையுடன் இடப்பட்டது.

(ஒம்/– மா. சந்திரமோகன்)
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சீர்காழி.**